Deposition of Witness
(Chapter XXV BNSS )
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE, VANIYAMBADI.
Case No. STC.No.469/2018

**DEPOSITION OF ACCUSED SIDE WITNESS No.1**

| | | | |
|---|---|---|---|
| Name: | ஜெகனீஷ் | Calling: | வங்கி உதவி மேலாளர் |
| Father's Name/ Husband's Name: | மாயாண்டி | Religion: | |
| Village: | புதுக்கோட்டை | Age: | 31 |
| Taluk: | புதுக்கோட்டை | | |

Solemnly affirmed in accordance with the provisions of Chapter X of Indian Evidence Act 1872 Dated : 22.05.2026 நேரம்: 11.39 AM

(எதிரி ஆஜர் ) ( இவ்வழக்கில் சாட்சியம் அளிக்க பாரத ஸ்டேட் வங்கி வேலூர் கிளையின் முதன்மை மேலாளர் ( Chief Manager ) சார்பாக அவ்வங்கியின் உதவி வங்கி மேலாளர் சாட்சியம் அளிக்க வந்திருந்த நிலையில் வேண்டுகோள் கடிதத்தின் அடிப்படையில் அனுமதிக்கப்படுகிறது. )

எ.த.சா. 1 முதன்மை விசாரணை.

நான் தற்போது வேலூர் பாரத ஸ்டேட் வங்கி கிளையில் உதவி மேலாளராக பணிபுரிந்து வருகிறேன். நீதிமன்றத்தில் இருந்து எனக்கு அழைப்பானை வந்ததின் அடிப்படையில் சாட்சியம் அளிக்க வந்துள்ளேன். எதை குறித்து சாட்சியம் அளிக்கவேண்டும் என அதில் குறிப்பிட்டு இருந்தது. இவ்வழக்கில் யுகா சின்னசாமி என்பவரின் கையெழுத்து வேறுபட்டு இருப்பதாக கூறி அவரது வங்கியில் உள்ள கையெழுத்து படிவம் கொண்டு வந்துள்ளேன். அந்த படிவத்தை இந்த நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய உள்ளேன். **எதிரியின் வங்கியில் உள்ள கையெழுத்து அடங்கிய சான்றிட்ட படிவம் எ.த.சா.ஆ 1 ஆக குறியீடு செய்யப்படுகிறது**. புகார்தாரர் தரப்பில் குறியீடு செய்வதற்கு ஆட்சேபனை தெரிவிக்கப்பட்டது. இவ்வழக்கில் உள்ள காசோலையில் R என இனிசியல் உள்ளது. ஆனால் எங்கள் வங்கியில் இனிசியல் குறிப்பிட்டு அவர் கையெழுத்து செய்துக்கொடுக்கவில்லை.

அதுவே நாங்கள் பெரிய வேறுபாடாக தான் வங்கியில் பார்த்தோம். எங்கள் வங்கியை பொறுத்த வரை வங்கியில் உள்ள கையெழுத்தும் காசோலையில் உள்ள கையெழுத்தும் ஒத்துபோகவில்லை என்றால் அந்த காசோலை திருப்பபடும். ரிட்டன் மெமோவில் சிக்னேசர் மிஸ்மேச் என குறிப்பிடாமல் போதிய பணம் இல்லை என திருப்பபட்டதற்கான காரணம் குறித்து எனக்கு தெரியாது. சென்னையில் உள்ள CCPC அலுவலகத்தில் கேட்டால் தான் தெரியும். எதிரியின் வங்கிகணக்கு எண் 1139296551. வங்கிகணக்காளரின் பெயர் யுகா சின்னசாமி R என்ற உள்ளது. யுகா என்று தனியாக குறிப்பிடவில்லை.

புகார்தாரர் தரப்பு குறுக்கு விசாரணை

எதிரி எந்த தேதியில் எங்கள் வங்கியில் வங்கி கணக்கு தொடங்கினார் என்றால் அதுக்குறித்த தகவல் நான் கொண்டு வரவில்லை. பெசிமண்ட் சிக்னேசர் வங்கி கணக்கு தொடங்கும்போது போட்டாரா என்றால் ஆமாம். பெசிமண்ட் சிக்னேசர் பற்றி எங்கள் வங்கியில் உள்ள கையெழுத்து நிபுணரிடம் கருத்துரை பெற்று வந்தேனா என்றால் அதுப்போன்று யாரும் எங்கள் வங்கியில் இல்லை. யுகா சின்னசாமி எங்கள் வங்கியில் வாடிக்கையாளர் என்றால் சரிதான். எங்கள் வங்கியில் இருந்து எங்கள் வாடிக்கையாளருக்கு கொடுத்த காசோலை என்னிடம் தற்போது காட்டப்படும் காசோலை என்றால் சரிதான். அந்த காசோலையில் உள்ள காசோலை எண் எதிரிக்கு சொந்தமானது என்றால் சரிதான். காசோலையில் இனிசியல் தான் இல்லை என்றாலும் அந்த கையெழுத்தில் எந்த மாற்றமும் இல்லை என்று சொன்னால் நாங்கள் அதை பெரியதாக பார்ப்பதில்லை. சிறிய வேறுபாடு இருந்தாலும் அது எங்கள் வங்கியால் திருப்பப்படும். 2018 ல் எதிரியின் காசோலையை ஆந்திரா வங்கியில் செலுத்தும் போது அந்த வங்கியில் இருந்து எங்கள் வங்கிக்கு காசோலை வசூலுக்காக எங்கள் வங்கிக்கு செலுத்தும் போது போதிய பணம் இல்லை என்று தான் எங்கள் வங்கியால் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். எங்கள் வங்கியில் கையெழுத்து தவறாக உள்ளது என்று குறிப்பிடவில்லை என்றால் சரிதான். CCPC அலுவலகத்திற்கு தான் தெரியும். அவர் ஆந்திரா வங்கியில் திருப்பப்பட்டதால் எதிரி கேட்டுக்கொண்டதற்கிணங்க இந்தியன் வங்கியில் செலுத்தியபோதும் காசோலையானது போதிய பணம் இல்லை என்றுதான் திருப்பப்பட்டுள்ளது என்றால் சரிதான். எ.த.சா.ஆ 1 ல் உள்ள எதிரியின் கையெழுத்தில் P,R என குறிப்பிட்டுள்ளதா என என்னால் அறுதியிட்டு கூற முடியுமா என்றால் அந்த

இரண்டு ரவுண்டு சீல் முறையே உள்ளது தான் கையெழுத்து. எ.த.சா.ஆ 1 ல் உள்ள எதிரியின் கையெழுத்தில் சீல் வைத்துள்ளது என்றால் பொதுவாக கையொப்பமாக இருந்தாலும் , புகைப்படமாக இருந்தாலும் சீல் வைப்பது வழக்கம். சீல் வைத்தால் இனிசியல் மறைந்திருக்கலாம் என்றால் சரியல்ல. கையொப்பம் வேறுபாடுக்குறித்து என்னால் எந்த முடிவையும் என்னால் கூறமுடியாது என்றால் சரியல்ல.இரண்டு ரவுண்டு சீல் இடையே உள்ளது தான் கையொப்பம் என்பது என்னுடைய கணிப்பு. எ.த.சா.ஆ 1 ல் அசலை நீதிமன்றத்தில் கொண்டு வரவில்லை என்றால் 10 வருடத்திற்கு பிறகு காலக்கெடு முடிந்த பிறகு ஆவணங்களை அழித்துவிடுவோம். அந்த ஆவணங்களை அழிப்பதற்கு முன்பு நகல் எடுக்கப்பட்ட ஆவணம் எதையும் நான் கொண்டு வரவில்லை என்றால் சரிதான். கையெழுத்து நிபுணருக்கு அனுப்பினால் தான் கையெழுத்தில் R உள்ளதா, P உள்ளதா என கூறமுடியுமா என்றால் எங்கள் கணிப்பைதான் கூறினேன். நான் கொண்டுவந்துள்ள ஆவணங்கள் எ.த.சா.ஆ 1 கணினி மூலம் பதிவிறக்கப்பட்டு இருப்பதாலும் அதை ஆவணமாக ஏற்றுக்கொள்ளமுடியாது என்று சொன்னால் அதை வைத்து தான் முடிவெடுத்தோம். எதிரியிடம் இருந்து அவரது காசோலை காணாமல் போனதாக எந்த ஒரு கடிதமும் வங்கிக்கு வரவில்லை என்று சொன்னால் அதுக்குறித்து எனக்கு தெரியாது. எதிரியிடம் இருந்து வங்கி கணக்கை நிறுத்திவைக்க எந்த கோரிக்கையும் வரவில்லை என்றால் வரவில்லை. காசோலையில் கையொப்பம் வேறுபாட்டு இருந்தால் மறுநாளே வாடிக்கையாளருக்கு வங்கியை அனுகும் மாறு கடிதம் அனுப்புவோம் என்றால் எங்கள் வங்கி காசோலைக்கு மட்டும் தான் கடிதம் அனுப்புவோம். மற்ற வங்கி காசோலையாக இருந்தால் ரிட்டன் மெமோ அனுப்புவோம். இன்று வரை எதிரி எங்கள் வங்கியில் வாடிக்கையாளராக இருந்து வருகிறார் என்றால் சரிதான்.

மறுவிசாரணை இல்லை.

சாட்சி கையொப்பம்
(ஓம்.) ஜெகனீஷ்

SRIPATHI K

Digitally signed by SRIPATHI K
Date: 2026.05.22 15:29:50 +0530